**கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் நடவடிக்கைகள்**
**முன்னிலை: திரு.மா.அரவிந்த், இ.ஆ.ப.,**

**செ.மு.எண்.ஈ4/29665/2021** **நாள்: 05 .01.2022**

**பொருள்:** பணியமைப்பு - கன்னியாகுமரி மாவட்டம் - ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி அலகு - மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, நாகர்கோவில் - ஈப்பு ஓட்டுநர் V.பிரசன்னகுமார் என்பவர் 17.06.2018 அன்று பணியிடைக்காலமானது - வாரிசுதாரரும் மகளுமான திருமதி.J.அஸ்வதி என்பவருக்கு கருணை அடிப்படையில் முற்றிலும் தற்காலிகமாக இளநிலை உதவியாளராக பணிநியமனம் செய்தது - பணி வரன்முறை செய்து உத்தரவிடல்.

**பார்வை:**

1. திருமதி.J. அஸ்வதி த/பெ. திரு.V.பிரசன்னகுமார் விண்ணப்பம் நாள். 23.07.2018.
2. இணை இயக்குநர்(பணியாளர்), அரசு தேர்வுகள் இயக்ககம், சென்னை அவர்களின் கடித எண்: ஓ.மு./268988/வி3/2018, நாள்: 27.08.2018
3. மாவட்ட ஆட்சித் தலைவர் கன்னியாகுமரி செயல்முறை ஆணை எண். ஈ4/29665/2018 நாள். 18.09.2018.
4. ஆணையாளர், மேல்புறம் ஊராட்சி ஒன்றியம் கடித எண். அ1/3177/2018 நாள் 19.09.2018.
5. கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் ந.க.எண் ஈ4/29665/2018 நாள் 14.12.2018.
6. அரசாணை (நிலை) எண் 48, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை நாள் 26.02.2021.
7. அரசு இணைச் செயலாளர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை (இ3), தலைமைச் செயலகம், க.எண் 6895/இ3/2021-5, நாள் 14.12.2021.
8. இயக்குநர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்ககம், சென்னை -15 ந.க.எண் 18355/2021/டி2 நாள் 18.12.2021.
9. தொடர்புடைய ஆவணங்கள்.

*******

**உத்தரவு:**

கன்னியாகுமரி மாவட்டம், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி அலகு, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையில் ஈப்பு ஓட்டுநராக பணிபுரிந்து பணியிடைக்காலமான V.பிரசன்னகுமார் என்பவரின் வாரிசும் மகளுமான திருமதி.J.அஸ்வதி என்பவர் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக மேல்புறம் ஊராட்சி ஒன்றியத்தில் பார்வை 3-ல் கண்ட செயல்முறை ஆணையின்படி பணிநியமனம் செய்யப்பட்டு உத்தரவிடப்பட்டதை தொடர்ந்து பார்வை 4-ன்படி 19.09.2018 முற்பகல் மேல்புறம் ஊராட்சி ஒன்றியத்தில் பணியேற்பு செய்துள்ளார்.

தனியரது பணியினை அவர் பணியேற்பு செய்த நாளான 19.09.2018 முற்பகல் முதல் வரன்முறை செய்வதற்கான கருத்துரு மற்றும் அசல் ஆவணங்கள் பார்வை 5-ன்படி இயக்குநரகம், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை, சென்னைக்கு அனுப்பப்பட்டது.

இப்பொருள் தொடர்பாக பார்வை 6 மற்றும் 7-ன்படி " 02.02.2016 முதல் 31.12.2019 வரை கருணையடிப்படையில் பணியமர்த்தப்பட்ட, எந்தவித விதத்தளர்வு மற்றும் அரசாணைகளுக்கு விலக்கு தேவைப்படாத அனைத்து பணியாளர்களின் பணி நியமனமும் நடைமுறையில் உள்ள விதிகளுக்குட்பட்டு சம்மந்தப்பட்ட நியமன அலுவலர்களின் ஒரு நிலை கூடுதல் அதிகாரம் பெற்ற அலுவலர்கள் அளவிலேயே வரன்முறை செய்ய உரிய செயல்முறை ஆணை வெளியிட்டு, தொடர்புடைய அரசுப் பணியாளரின் பணிப்பதிவேட்டில் பதிவு செய்யப்பட வேண்டும்" என ஆணை மற்றும் தெளிவுரை வரப்பெற்றுள்ளது.

எனவே 19.09.2018 அன்று கருணை அடிப்படையில் பணிநியமனம் செய்யப்பட்டு மேற்குறிப்பிட்டுள்ளவாறு விதித்தளர்வு மற்றும் அரசாணைகளுக்கு விலக்கு தேவைப்படாத திருமதி. J.அஸ்வதி, இளநிலை உதவியாளர் என்பவரது பணி தனியர் இளநிலை உதவியாளராக பணியேற்பு செய்த நாளான **19.09.2018 முற்பகல்** முதல் பணி வரன்முறை செய்து உத்தரவிடப்படுகிறது.

இவ்வுத்தரவு விபரம் தனியரது பணிப்பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டுள்ளது எனச் சான்றளிக்கப்படுகிறது.

மாவட்ட ஆட்சியருக்காக,
கன்னியாகுமரி மாவட்டம்.

05.01.2022

**பெறுநர்**

திருமதி.J.அஸ்வதி,
இளநிலை உதவியாளர்,
மேல்புறம் ஊராட்சி ஒன்றியம். **(உரிய வழிமுறையாக)**

**நகல்:**

1. இயக்குநர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை, பனகல் கட்டிடம், சைதாப்பேட்டை, சென்னை - 15..
2. ஆணையாளர், மேல்புறம் ஊராட்சி ஒன்றியம்
3. ஈ4- இருப்புக் கோப்பு